**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியையே மனுவாக ஏற்றுக்கொண்டு, உடனடியாக அப்பகுதி மக்களுக்குப் பட்டா வழங்க வட்டாட்சியருக்குப் பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

**மின் வசதி**

*__6984—திரு. சு. மாதேஸ்வரன்:__

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, பெரிய கல்வராயன்மலை, மேல்நாடு ஊராட்சி, கீழ்நாடு ஊராட்சி, மண்ணூர், ஆவாரை ஆகிய பகுதிகளுக்கு மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆத்தூர் தொகுதி, பெரிய கல்வராயன்மலை, மேல்நாடு ஊராட்சி, கீழ்நாடு ஊராட்சி, மண்ணூர், ஆவாரை ஆகிய குக்கிராமங்கள் முழுவதும் வனப் பகுதியில் அமைந்துள்ளதால் உரிய கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, வனத் துறையினரிடம் தடையில்லா சான்று பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தடையில்லா சான்று வனத் துறையிடமிருந்து

2012 மார்ச் 30]

பெறப்பட்டவுடன் மின்சார வசதி அளிக்க அரசு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்ற மகாகவி பாரதி படைத்த, இலட்சியப் பெண்ணாக, புதுமைப் பெண்ணாக, எங்களின் புரட்சித் தலைவியாக, மக்களால் மணிமகுடம் சூட்டப்பட்ட மாதரசியாக விளங்கும் அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட பெரிய கல்வராயன்மலை, சின்ன கல்வராயன் மலைப் பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கு மின் வசதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதி, பச்சைமலை ஊராட்சி, வெங்கமுடி, மாயம்பாடி, சின்னநாகூர், பெரியநாகூர், மேல்வஞ்சாரை, கீழ்வஞ்சாரை ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு மின் வசதி செய்துதர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மலைப் பகுதி கிராமமா?

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மலைப் பகுதி கிராமங்களிலே

மின் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று சொன்னால், வனத் துறையின் அனுமதி பெறவேண்டியது கட்டாயம்.

முற்பகல் 10—25

வனத் துறையின் அனுமதி பெறுவதிலே, அரசு தேவையான இடங்களிலே முயற்சிகள் எடுத்துவருகிறது. அதற்கு முன்பாக அந்தப் பகுதியினுடைய சம்பந்தப்பட்ட ஊராட்சியினுடைய கிராம சபைக் கூட்டத்தைக் கூட்டி, கிராம சபையில் தீர்மானம் நிறைவேற்றி, அதற்குப் பின்பு அந்த ஊராட்சிமன்றத் தீர்மானத்தோடு, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தினுடைய தீர்மானத்தையும் இணைத்து இங்கே அனுப்பினால் வனத் துறையின் அனுமதியைப் பெற்று, அதற்கு அடுத்தபடியாகத்தான் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 100 சதவீத கிராமங்களும் மின் இணைப்பு பெறவேண்டுமென்று சென்ற ஆட்சிக் காலத்திலேயே முடிவு செய்யப்பட்டு, ஏறத்தாழ ஓரிரு மலைப் பகுதி கிராமங்களைத் தவிர, ஒருசில மலைப் பகுதி கிராமங்களைத் தவிர அனைத்து கிராமங்களுக்கும் மின் வசதி செய்துதரப்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த மலைக் கிராமங்களுக்கு உரிய மின் வசதி வழங்குவதற்கு அரசு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதியிலே, தங்கச்சிமடம் ஊராட்சிக்கு உட்பட்ட அந்தோணியார்புரம் கிராமத்திற்கு மின் வசதி செய்துதர அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Very good. சுருக்கமாகக் கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இதுவரை ஒருசில கிராமங்களைத் தவிர, சில இயற்கை இடர்ப்பாடுகள் அல்லது சூழ்நிலையின் காரணமாக ஓரிரு கிராமங்களில் மட்டும் மின் வசதி செய்யப்படாமல் இருக்கின்றதே தவிர, 99 சதவீத கிராமங்களுக்கு மின் வசதி செய்யப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கிராமத்திற்கும் உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**23—**

## கொள்முதல் விலை

***5416—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்காச்சோளத்திற்குக் கொள்முதல் விலை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நம்முடைய தமிழக அரசு, மக்காச்சோளம் உட்பட்ட வேளாண்மை விளைபொருட்களுக்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையையே அடிப்படைக் கொள்முதல் விலையாக நிர்ணயிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.